# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.67/2018

2025=ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.2 லில்லி வயது 55 க/பெ சின்னதம்பி**

**நேரம் - 12.10**

**குறுக்கு விசாரணை**

நான் இந்நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வந்துள்ள இவ்வழக்கின் புல எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் கையொப்பம் மட்டும் போட தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள ச்ர்வே எண்களை குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ச்ர்வே எண்களை பற்றி என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது சரியல்ல என்றால் சரிதான்.

2.என் தந்தை ஆரோக்கியசாமி மற்றும் தூசைராஜ் ஆகியோரிடமிருந்து ஆறுமுகம் 05.03.1986 அன்று கிரையம் பெற்றார் என்றாலும், அதில் ஜக்பந்தி கண்டுள்ளபடி கிரையம் பெற்றார் என்றால் சரிதான், அதன் படி சுவாதீனம் ஆறுமுகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு 1992ம் வருடம் 1986ல் வாங்கிய சொத்திற்கு வடக்கு பக்கம் சொத்தை விற்று விட்டார் என்றால் சரிதான், அதன்படி ஆறுமுகத்திடம் சொத்தை ஒப்படைத்து விட்டார் என்றால் சரிதான்.

3. 1986ம் ஆண்டு வாங்கிய நிலத்தில் வண்டி பாதைக்கு வடக்கில் உள்ள நிலத்தில் போர் போட்டு தண்ணீர் இறைத்து மற்றும் மற்றொரு கிணற்றில் இருந்து மின்சார இணைப்பு செய்யப்பட்டு பயிர் செய்து வந்தார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் 1986 மற்றும் 1992 ல் வாங்கிய சொத்தின் ஜக்பந்திகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே 1986 மற்றும் 1992ல் ஆகிய வருடங்களில் வாங்கிய சொத்தின் ச்ர்வே எண்கள் தவறாக குறிப்பிட்டுள்ளதை நான் மற்ற பிரதிவாதிகள் சாதகமாக பயன்படுத்தி ஏற்கனவே கிரையம் பெற்ற சொத்தை நான் மற்ற பிரதிவாதிகள் கிரையம் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

4. வாதி ஆறுமுகத்திற்கு என் தந்தை கிரையம் கொடுத்த சொத்தை பிரதிவாதிகள் 6 மற்றும் 7 ஆகியோருக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றாலும், சுவாதீனம் கொடுக்கவில்லை என்றாலும்

சரிதான். நீதிமன்றத்திலிந்து சாட்சி அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் சரவணன் மற்றும் இளமாறனுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் 12.30**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi

District Munsif,
District Munsif Court,Arni